**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **SC.No. 2/ 2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா. **9**
**Defence**
**Court**

**Name** **:** ஆபிரகாம்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 16th September 2021.

முதல் விசாரணை:

நான் தென்காசியில் மேலகரம், பாரதி நகரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இறந்தபோன சுரேஷ், சேகர், செந்தில் என்ற செந்தில் குமார் ஆகியோரை எனக்கு தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது போலீசார் வீட்டிலிருந்த என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் மேலும் இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எந்த விவரமும் தெரியாது.

இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது:-

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 14.08.2007 அன்று காலை 10.15 மணிக்கு பஜாஜ் சிடி 100 என்ற TN 76 Y 4696 என்ற வண்டியில் நானும் பேரின்பராஜ், அலெக்ஸாண்டர் மூவரும் மேல முத்தாரம்மன் கோவில் பக்கம் நின்றுகொண்டிருந்த போது TN72 Z 9757 என்ற அம்பாசிட்டர் காரில் சென்ற சக்திபாண்டியன், சுரேந்தர், கபிலன், சுப்பிரமணியன் ஆகியோர்கள் சிறிது நேரத்தில் கிழக்கு பார்த்து ஓடி வந்தார்கள் என்றும், அவர்களை V.T.S.R குடோன் பக்கம் ஏற்கனவே நின்ற சம்சுதீன் மேஸாக், நவாஸ், சுபகான் மற்றும் அவர்களது கூட்டாளிகள் ஆயுதங்களுடன் வழி மறித்து விரட்டவும் சக்திபாண்டியனும் அவருடன் வந்தவர்களும் திரும்பி மேற்காக ஓடினார்கள், திருநெல்வேலி அல்வா கடை பக்கம் சேகரை ஹனிபா, அப்துல்லா, அயூப் அன்சாரி, ராஜா முகமது, மீரான் மைதீன் ஆகியோர்கள் ஆயுதங்களுடன் வெட்டவும் சேகர் அந்த இடத்திலேயே இறந்துவிட்டான் என்றும், நாங்கள் மூவரும் நம்மையும் வெட்டி விடுவார்களோ என்று நினைத்து நாங்கள் வந்த மோட்டார் பைக்கிலேயே ஆயக்குடி ரோட்டிலிருக்கும் சக்திபாண்டியன் தோப்பிலேயே விட்டுட்டு போய்விட்டோம் பிறகு இந்த இரு கோஷ்டிக்கும் நடந்த தாக்குதலில் செந்தில், சுரேஷ், அசன்கனி, நாகூர்மீரான், பஷீர் ஆகியோர்கள் இறந்து விட்டார்கள் என்பதை கேள்விபட்டதாக போலீஸ் விசாரணையில் வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், நாங்கள் சமாதானமாக போய்விட்டோம் என்பதால் அதன் அடிப்படையில் நடந்த சம்பவத்தை மறைத்து உண்மைக்கு மாறாக அரசு தரப்பு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னிடம் வெற்றுப் பேப்பரில் தான் கையெழுத்து வாங்கினார்கள்.